**செ.வெ.எண்:26** **நாள்:09.11.2021**

# நாகப்பட்டினம் மாவட்டத்தில் தொடர் மழை காரணமாக பொதுமக்களுக்கு மாவட்டஆட்சித்தலைவர் டாக்டர் அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப அவர்களின் வேண்டுகோள்

வானிலை ஆராய்ச்சி மையம் முன்னறிவிப்பின்படி குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் ஏற்பட்டிருப்பதால், 09.11.2021 முதல் நாகப்பட்டினம் மாவட்டத்தில் கனமழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பொதுமக்களுக்கு கீழ்க்கண்டுள்ள முன்னெச்சரிக்கை அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

அடையாள அட்டை, கல்வி சான்றிதழ்கள், நிலப்பட்டா, பத்திரங்கள் போன்ற முக்கிய ஆவணங்களை நெகிழி பைகளில் பத்திரமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

வீடுகளின் அருகாமையில் அறுந்த மின்கம்பிகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும், உடைகளை உலர்த்த மின்கம்பிகளை உபயோகிக்கக்கூடாது.

தாழ்வான இடங்களில் வசிக்கும் மக்கள் தங்களின் பாதுகாப்பினைக் கருதி அருகில் இருக்கும் நிவாரண மையங்களில் தங்கிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இதற்கு அலுவலர்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

டார்ச் லைட்டுகள், தீப்பெட்டிகள், மெழுகுவர்த்தி, மருந்துகள் மற்றும் உலர்ந்த உணவு வகைகளை நெகிழி பைகளில் வைத்து எடுத்துச் செல்ல ஏதுவாக வைத்துக்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நீர் தேங்கும் பகுதிகளில் கால்நடைகளை கட்டி வைக்காமல், கால்நடைகள் தாங்களாகவே எளிதில் வெளியேறும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

மழைக்காலங்களில், சிறுவர்கள் மற்றும் குழந்தைகள் தனியாக வெளியில் செல்லாமல் தவிர்க்க வேண்டும்.

ஆறு மற்றும் குளங்களில் குளிக்கச் செல்வதை முழுவதும் தவிர்க்க வேண்டும்.

தேவையில்லாமல் மின்கம்பங்களின் அருகே செல்வதை தவிர்க்க வேண்டும்.

நீரிலோ அல்லது மின்சாரத்திலோ பொதுமக்கள் காயப்பட நேர்ந்தால் உடனே நாகப்பட்டினம் மாவட்ட வெள்ளக்கட்டுப்பாட்டு அறையில் உள்ள கட்டணமில்லா தொலைபேசி எண். 1077 தொடர்பு கொள்ள வேண்டும்.

இடி மற்றும் மின்னல் ஏற்படும் போது பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நடைமுறைகளை கடைபிடித்து பொதுமக்கள் தங்களை பாதுகாத்து கொள்ள வேண்டுமென நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் அ.அருண்தம்புராஜ், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**